OS 400/2021

வா.சா.1 வெங்கடேசன் த/பெ கிருஷ்ணன்

நாள் 08.01.2025

4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கினை பணம் தர வேண்டும் என்று கேட்டு தாக்கல் செய்துள்ளேன். அண்ணாமலை என்பவர் அவரது வீட்டினை எனக்கு அடமானம் போட்டு பணம் வாங்கினார். அவ்வாறு பணம் பெற்றுகொண்டு அடமான கடனை அண்ணாமலை திருப்பி செலுத்தவில்லை என்பதால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2. நான் வட்டி வியாபாரம் செய்கிறேனா என்றால் இல்லை. அண்ணாமலை தன் குடும்ப செலவிற்காக என்னிடம் பணம் கேட்டார். நான் ஆத்துறை கிராமத்தை சேர்ந்தவர். அண்ணாமலை கண்டமநல்லூர் கிராமத்தை சேர்ந்தவர். கண்டமநல்லூர் மேல்மலையனூர் தாலுக்காவை சேர்ந்தது என்றால் சரிதான்.

3. அண்ணாமலை நான் அடமானத்திற்கு பணம் கொடுக்க வைத்திருப்பதாக யாரிடமாவது சொல்லி அந்த தகவல் அண்ணாமலைக்கு தெரிந்து என்னிடம் வந்து கடன் வாங்கினாரா என்றால் இல்லை. அண்ணாமலை என்னிடம் கடன் வாங்கும் போது ஒரு இடைநிலை பள்ளியல் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். அந்த பள்ளி எந்த ஊரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

4. 07.01.2013 அன்று அடமான கடன் கொடுக்கப்பட்ட அடமான பத்திரம் பதிவு செய்யப்பட்டது. அந்த அடமான பத்திரத்தில் கருணாநிதி மற்றும் கண்ணப்பன் ஆகியோர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். அடமான பத்திரம் எழுதியவர் பெயர் மணிவண்ணன். அடமான பத்திரம் பதிவு செய்யப்பட்ட செலவு மற்றும் பத்திரம் வாங்கப்பட்ட செலவு ஆகியவற்றை அண்ணாமலை தான் பார்த்துக்கொண்டார். சாட்சிகள் கருணாநிதி மற்றும் கண்ணப்பன் ஆகியோரை அண்ணாமலை தான் அழைத்து வந்தார்.

5. அண்ணாமலை என்னிடம் 10 மணிக்கு பணம் கேட்டார் நான் 11 மணிக்கு சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன். அடமான பத்திர பதிவின் போது என் அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டை கொடுத்தேனா என்றால் இல்லை. அடமானம் போடுவதற்கு முன்பு அண்ணாமலைக்கு எந்தஎந்த இடத்தில் என்ன என்ன சொத்துக்கள் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6. அண்ணாமலை தனக்கு சொந்தமான தேவிகாபுரத்தில் குமரன் நகரில் உள்ள மனை எண்.47 ஐ மற்றும் மெத்தை வீட்டுடன் அடமானம் போட்டு கொடுப்பதாக சொன்னார். அவ்வாறு அண்ணாமலை அடமானம் போட்டு கொடுப்பதாக சொன்ன வீட்டினை நான் சென்று பார்த்தேனா என்றால் இல்லை. அடமானம் போடும் சமயத்தில் அந்த வீட்டில் யார் குடியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அண்ணாமலை குடியிருப்பதாக சொன்னார் ஆனால் நேரடியாக எனக்கு தெரியாது.

7. அவ்வாறு அண்ணாமலை 10 மணிக்கு பணம் கேட்டு 11 மணிக்கு அடமானம் போடுவதற்கு முன்பு தாவா சொத்து சம்மந்தமான வருவாய் துறை ஆவணங்கள் பார்த்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் அடமான சொத்து யார் பெயரில் இருந்தது என்பதற்கான வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதேபோல் அடமானம் போட்ட அன்று அடமான சொத்து சம்மந்தமாக வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் இல்லை.

8. இந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் அடமான சொத்து சம்மந்தமான வில்லங்கச்சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அடமான சொத்து அண்ணாமலைக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கான பதிவு செய்யப்பட்ட மூல பத்திரம் எதையும் நான் பார்த்தேனா என்றால் இல்லை. 2013 ம் ஆண்டு தான் அடமான பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

9. ஆனால் 2011 ஆண்டிலேயே அண்ணாமலை அந்த சொத்தினை சுந்தரம் பி என் பி பாரிபாஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் அந்த சொத்து பத்திரத்தினை ஒப்படைவு செய்து கடன் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதன் பிறகு 2015ம் ஆண்டில் அடமான சொத்து சம்மந்தமாக வில்லங்கம் போட்டு பார்த்தபோது தான் அவ்வாறு 2011 ம் ஆண்டில் அண்ணாமலை கடன் பெற்ற விவரம் தெரியவந்தது. வா.சா.1 தானாகவே முன்வந்து தன்னிடம் உள்ள 30.10.2015 தேதியிட்ட வில்லங்கச்சான்றினை நீதிமன்றத்தில் ஒப்படைத்தார். அந்த வில்லங்கச்சான்றினை பார்வையிட்ட பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் அந்த ஆவணத்தினை பிரதிவாதி தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யும்படி கேட்டுக்கொண்டார். அதன் அடிப்படையில் வா.சா.1 தானாகவே முன்வந்து ஒப்படைத்த 30.10.2015 தேதியிட்ட வில்லங்கச்சான்று எண்.2028 **பி.வா.சா.ஆ**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவ்வாறு 2015ம் ஆண்டு வில்லங்கம் போட்டு பார்த்த போது தாவா சொத்து ஏற்கனவே வில்லங்கத்தில் இருப்பது தெரியவந்தது என்றால் சரிதான்.

10. பி.வா.சா.ஆ1 வில்லங்கச்சான்று முன்னிலைக்கு நான் தெரிந்து கொண்ட வில்லங்கம் எப்போது ரத்து ஆனது என்று எனக்கு தெரியாது.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)